**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**அ.வ.எண்.194/2023**

**21.08.2026**

**(பி.வா.சா. 1 ) திரு .ஹரீஸ்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

இந்த வழக்கில் நான் ஏற்கனவே சாட்சியமளித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணமான பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களை கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்ப என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடியாகிவிட்டது என்று சொன்னால் சரிதான். அந்த தள்ளுபடி உத்தரவின்மீது நான் எவ்வித மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மையிலேயே சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிச் சீட்டில் கையெழுத்து செய்து கடன் பெற்றுக்கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** :– இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

RAJA B Digitally signed by RAJA B Date: 2026.08.21 15:16:56 +0530

Additional Sub Judge,
Palani.